**28.10.2025**
OS 194/2024 (Old OS 204/2013)
DW2 – ரேணுகா க/பெ காசிவேல்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

12.04.1956ம் தேதியில் என் மாமனார் மாரி தாவா புல எண் ஆண 55/2ல் மொத்த விஸ்தரினம் 2 ஏக்கரா 84 சென்ட்டில் குறிப்பிட்ட ஜக்பந்திக்குள் 4சென்ட் இடத்தில் எங்கள் ஊரை சேர்ந்த குட்டி கவுண்டர் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுக்கும் போது எனது கணவன் காசியும் வாதியின் தந்தையான ராமசாமியும் மைனராக இருந்ததால் மைனருக்காவும் தனக்காவும் என்று கிரையம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். என் மாமனார் மாரி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் இறந்த பின் அவரது மகன்களான என் கணவர காசியும், வாதியின் தந்தையான ராமசாமியும் என் மாமனாருக்கு பாதியப்பட்ட சொத்துக்கள் குறித்து ஒரு வாய்மொழி பாகம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்பட வாய்மொழி பாகத்தில் தாவா புல எண் ஆன 55/2ல் என் மானாருக்கு கிடைத்த 0.47 செனட்டில் குட்டி கவுண்டருக்கு கிரையம் கொடுத்த 4 சென்ட் போக மீதி இருந்த 43சென்ட்டை ஆளுக்கு பாதியாக பாகம் ஏற்படுத்தினார்கள் என்றால் பாகமே பிரிக்கவில்லை மேற்படி காசியும், ராமசாமியும் இருவரும் மேற்படி சொத்தை ஒன்றாக தான் பயிர் செய்து வந்தார்கள். மேற்படி குட்டி கவுண்டருக்கு 4 செண்ட் போக மீதி உள்ள 43 செண்ட்டை ஆளுக்கு 21.5 சென்ட் என்று சரிபாகமாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

ராமசாமிக்கு 2வது மகன் இலட்சுமண கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி இலட்சுமண கவுண்டர் அவரது திருமணத்தின் பயனாக தங்கவேல், கணேசன், முனுசாமி என்றால் சரிதான். மேற்படி லட்சுமண கவுண்டருக்கு கிடைத்த தாவா புல எண் 55/2ல் 0.94 செண்டை இலட்சுமண கவுண்டர் மற்றும் அவரது 3 மகன்கள் ஒன்றாக இருந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

என் ஊரை சேர்ந்த பெரிய அண்ணன் குமாரர்கள் கன்னி கவுண்டர் மற்றும் சின்னதம்பி ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கன்னி கவுண்டர் மற்றும் சின்னதம்பி ஆகியோர் லட்சுமண கவுண்டரின் 2வது மகன் கணேசன் என்பவரிடம் தாவா புல எண் ஆன 55/2ல் அவருக்கு பாதியப்பட்ட 0.94 செண்ட்டில்

குறிப்பிட்ட ஜக்குபந்திக்குள் 0.08 செண்ட் நிலத்தை 25.06.1960 தேதியில் கிரயம் பெற்று அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது.

லட்சுமண கவுண்டர் இறந்தப்பின் அவரக்ளது மகன்கள் கணேசன் மற்றும் முனுசாமி இருவரும் தாவா புல எண் ஆன 55/2ல் மேற்படி வகையில் 0.08 செனட்டை கிரயம் கொடுத்தது போக மீதி இருந்த 0.86 சென்ட்டில் அவர்களுக்குரிய 2/3பாகத்தை அவர்களின் மூத்த சகோதரரான தங்கவேலுக்கு 25.06.1960 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரத்தின் மூலம் கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் தெரியாது. அந்த வகையில் தங்கவேலுக்கு தாவா புல எண் ஆன 55/2ல் குறிப்பிட்ட ஜக்பந்திக்குள் 0.86 சென்ட் நிலத்தை பாத்தியப்பட்டு தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தங்கவேல் கவுண்டரும் அவரது மகன் முத்துவும் சேர்ந்து 17.07.1983 தேதியில் ரூ.5000 பெற்றுக்கொண்டு 0.86 சென்ட் ராஜமாணிக்கத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் தங்கவேலும் அவரது மகன் முத்துவும் அவர்களுக்கு 0.86 சென்ட் பாத்தியப்பட்டு இருந்து வந்த வகையிலும் ஆனால் அதிக விஸ்தரணம் ஆன 1 ஏக்கரா 76 சென்ட் என்று மேற்படி கிரைய பத்திரத்தை ஏற்படுத்தி இருந்தாலும் கிரையம் பெற்ற ராஜமாணிக்கத்தை பொறுத்த 0.86 சென்ட் மட்டுமே சுவாதீனம் எடுத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

தாவா புல எண் ஆன 55/2ல் லட்சுமண கவுண்டர் மற்றும் அவரது மகன் கணேசன் இருவரும் சேர்ந்து கன்னி கவுண்டர் மற்றும் சின்ன தம்பி ஆகியோருக்கு 0.08 செண்டும் லட்சுமண கவுண்டர் மகனான தங்கவேல் மற்றும் அவரது மகன் முத்துவும் ராஜமாணிக்கத்திற்கு 0.86 செண்ட்டும் கிரையம் கொடுத்த வகையில் அவர்களுக்கு வேறு எந்த நிலமும் பாத்தியப்பட்டு இருக்கவில்லை என்றால் சரியல்ல.

என் கணவர் காசிவேலை பொறுத்து தாவா புல எண்ணில் அவருக்கு பாத்தியப்பட்ட 0.21.5 சென்ட்டை பொறுத்து 20.02.1986தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் படி ரூ.950ஐ பெற்றுக்கொண்டு மேற்படி மதுபால கவுண்டர் குமாரர் ராஜமாணிக்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுக்கும் போது எனது பாகமாக கிடைத்து என் சுவாதீனத்தில் இருந்து வரும் அயன் புஞ்சை சர்வே எண் 55/2ல் 2.84 ஏக்கரில் ராஜமாணிக்கம் நிலத்திற்கும் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு இதன் மத்தியில் 21.5 சென்ட் நிலம் என்று குறிப்பிட்டு

காட்டிதான் மேற்படி கிரையத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுத்த பின் எனது கணவர் காசிக்கு தாவா சொத்தை பொறுத்த வரையில் எந்தவொரு சொத்தையும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி கிரைய பத்திரத்தில் என் கணவர் காசி தாவா சொத்தை குறித்து அவருக்க பாகம் வந்ததையும் அவரின் பாக நிலத்தை சுற்றி ராஜமாணிக்கத்திற்கு பாத்தியமான நிலத்தை குறிப்பிட்டு காட்டியும் மேற்படி கிரையத்தை ஏற்படுத்தினார் என்றால் அவ்வாறு பாகமே பிரிக்கவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள ஜக்பந்தியை பார்த்தாலே என் கணவர் தாவா சொத்தில் எந்தவொரு நிலத்தையும் நிறுத்திக்கொண்டு கிரையம் கொடுக்கவில்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. எதவாது ஒரு பக்கத்தை என் கணவர் நிறுத்திக்கொண்டு இருந்து இருந்தால் நிறுத்திக்கொண்ட நிலம் என்று குறிப்பிட்டு காட்டியிருப்பார் அவர் எதுவும் நிறுத்திக்கொள்ளாததால் தான் ராஜமாணிக்கத்திற்கு பாத்தியப்பட்ட நிலம் என்று குறிப்பிட்டு காட்டி மேற்படி கிரயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

என் கணவர் 21.5 சென்ட் பாத்தியப்பட்டு இருந்தாலும் மேற்படி கிரைய பத்திரத்தில் 2.5 சென்ட் அளவு நிலத்தை குறிப்பிடாமல் 19 சென்ட்ட நிலத்தை மட்டும் குறிப்பிட்டு தவறாக கிரையத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த பின்பு என் கணவரோ நானோ நிலத்தை அனுபவித்து வந்தோம் என்பவதற்கு எழுத்து பூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி எழுத்து பூர்வமான ஆவணம் உள்ள என்று நான் பொய் சொல்கிறேன் என்றால சரியல்ல. அவ்வாறு எழுத்துபூர்வமான ஆவணங்கள் இல்லாததால் தான் நான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

இராமசாமி கவுண்டருக்கு 3வது மகனாக பெரிசு என்பவர் பிறந்தார் என்றால் சரிதான். மேற்படி பெரிசு என்பவருக்கு ஒரே மகன் சுப்ரமணி என்றால் சரிதான். தாவா புல எண் 55/2ல் மொத்த விஸ்தரணம் ஆன 2.84 ஏக்கரில் 3 ல் 1 பாகமான 0.94 சென்ட் மேற்படி பெரிசு என்பவருக்கு பாகமாக கிடைத்தது என்றால் பாகம் கிடைக்கவில்லை.

என் ஊரை சேர்ந்த அப்பு கவுண்டர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்பு கவுண்டர் மேற்படி பெரிசு மற்றும் சுப்ரமணி என்பவரிடம் 21.01.1958 தேதியில் தாவா புல எண் ஆன 55/2ல் பெரிசு மற்றும் சுப்ரமணிக்கு பாத்தியப்பட்ட 0.94 ஏக்கரில் குறிப்பிட்ட ஜக்பந்திக்குள் 0.09 சென்ட் நிலத்தை கிரையம் பெற்று பயிர்

செய்து வருகிறார் என்றால் சரியல்ல. றேம்படி சுப்பிரமணிக்கு மொத்தம் 3 மகன்கள் பிறந்தார்கள் அதில் மூத்த மகன் ஏழுமலை என்றால் சரிதான். பெரிசுவும், சுப்ரமணியும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி ஏழுமலை என்பவர் 29.07.1993 தேதியில் மேற்படி 0.09 சென்ட் கிரையம் கொடுத்து போக மீத இருந்த 0.85 சென்டை ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையம் பத்திரத்தின் படி ராஜமாணிக்கம் மனைவி உண்ணாமலை என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் வாங்கிய பின் உண்ணாமலை அந்த சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வகையில் ராஜமாணிக்கம் மற்றும் அவரது மனைவி உண்ணாமலையும் தாவா சொத்தில் இருந்த கிணற்றில் மேற்படி கிரையம் வாங்கிய வகையில் 34/36 பாக கிணற்றை அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 36ல் மீதம் உள்ள 2 பாகத்தில் பொறுத்து வாதியின் தந்தையான ராமசாமி தண்ணீர் எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் எல்லாம் உண்மையான சங்கதிகள் தான் என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

இராமசாமி தாவா புல எண் 55/2ல் அவருக்கு பாத்தியமான 21.5 சென்ட் நிலத்தை பொறுத்து வாதிகள் ஆன அவர்களின் மகன் மற்றும் மகளுக்கு கடந்த 17.04.2009 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட தான பத்திரத்தின் படி தானம் கொடுத்துவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வகையில் வாதி மைனர்களாக இருந்ததால் இராமசாமியின் மனைவி வாதியின் தாயான சின்னத்தாய் அம்மாளுக்கு கார்டியனாக காட்டி மேற்படி தானத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி தானத்தை வாதியின் சார்பாக சின்னத்தாய் அம்மாள் சொத்தை சுவாதீனம் எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி தானத்தை பொறுத்த வரையில் சட்டப்படி எழுதப்பட்டு, பதிவு செய்யப்பட்டு சாட்சிகளால் கையொப்பம் இடப்பட்ட ஒரு சட்டப்படியான ஆவணம் என்றால் சரியல்ல. வாதி தற்போது மைனரில் இருந்து மேஜர் ஆனதால் அவர்கள் தாயாரிடம் இருந்து தாவா சொத்தை சுவாதீனம் எடுத்து அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் எல்லாம் மறைத்து எனது கணவர் காசி தாவா சொத்து 55/2ல் மொத்த விஸ்தீரனமா 2.84 ஏக்கர் நிலத்தை பொறுத்து ஒரு ராம கவுண்டருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று பொய்யாக அவரது எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இராம கவுண்டர் அவரது மகன்களான பெரியசாமி மற்றும் மாரி கவுண்டர இருவரையும் மேற்படி தாவா

புல எண் ஆன 55/2ல் மொத்த விஸ்தீரணமான 2.84 ஏக்கரையும விட்டு விட்டு இறந்துவிட்டார் என்று சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி இருவரும் ஒரு வாய்மொழி பாகம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று கூறுவதும் தவறான ஒன்று என்றால் சரியல்ல. அந்த வாய்மொழி வாதத்தில் பெரியசாமி கவுண்டரும், மாரி கவுண்டரும் சரி பாகமாக இருவரும் 1.42 ஏக்கர் பாகம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொல்லயுள்ளதும் தவறான ஒன்று என்றால் சரியல்ல. மாரி கவுண்டரை பொறுத்து அவர் மேற்படி வகையில் அவருக்கு கிடைத்த 1.42 ஏக்கரை பொறுத்து என் கணவர் காசியையும், வாதியின் தந்தை ராமசாமியையும் வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல.

எனது கணவரும், வாதிகளின் தந்தை ராமசாமியும் ஆளுக்கு சரிபாதியாக தாவா புல எண்ணில் 0.71 ஏக்கர் நிலத்தை பாகம் பிரிந்துக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்வது தவறான ஒன்று என்றால் சரியல்ல. மாரி கவுண்டருக்கு 0.47 சென்ட் தான் பாகம் கிடைத்தது அதைப்பொறுத்து அவர் குட்டி கவுண்டருக்கு 0.4 சென்ட் கிரையம் கொடுத்து போக மீதம் உள்ள 0.43 செண்ட்டை தான் எனது கணவரும் இராமசாமியும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் அந்த வகையில் தாவா புல எண்ணில் எனது கணவருக்கு 0.21.5 சென்ட் தான் பாகம் கிடைத்தது என்றால் சரியல்ல. அவ்வாறு தாவா புல எண்ணில் கிடைத்த 0.21.5 சென்ட்டையும் எனது கணவர் ராஜமாணிக்கத்திற்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுத்த பின்பு எனது கணவருக்கு பாத்தியப்பட்டு எந்த சொத்தையும் அவரோ நானோ அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தை பொறுத்த வரையில் அது ராமசாமிக்கு பாகமாக கிடைத்த சொத்து அதை ராமசாமி அனுபவித்து வந்து தற்போது வாதிகளுக்கு தானம் கொடுத்து வந்து வாதிகள் தான் அதை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் 19.07.2013 தேதியில் எனது கணவரும், நானும் மற்ற பிரதிவாதிகளும் அத்துமீற நுழைய பார்த்தோம் என்றும், மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் ராமசாமியும் வாதிகளும் தடுத்து நிறுத்தினார்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்தை பொறுத்த வரையில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாவா படி தீர்பாகும் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு பாத்தியப்பட்ட 21.5

சென்ட்டை பொறுத்து ராஜமாணிக்த்திற்கு கிரையம் கொடுத்து விட்டார் என்பதை தடவியல் நிருபணரும் உறுதி செய்து அதற்கான அறிக்கை தாக்கல் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள படி தாவா தீர்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்